RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 210 | ஆகஸ்டு.2 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "என் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியே காரணம்": செந்தில் பாலாஜி



கரூர், ஆக.2-

என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியே காரணம் என முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ தெரிவித்தார்.

கரூர் அருகேயுள்ள பண்டுதகாரன்புதூரில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவிகளுடன் கலந்துரையாடிய வி.செந்தில் பாலாஜி, அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசியது: பெண்கள் அரசு அதிகாரிகளாகி மக்களுக்கு சேவை செய்வதுபோல, அரசியலிலும் ஈடுபட்டு பெண்களுக்கான உரிமைகள், சேவைகளை பெற வேண்டும். என் மீதான ஊழல் குற்றச்சாட்டில் எனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. முன்னாள் முதல்வர் பழனிசாமி மீது நம்பிக்கை இல்லை என 18 எம்எல்ஏக்கள் ஆளுநரிடம் புகார் அளித்தோம்.

அதன் பிறகு என் மீது வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. வேலைக்காக ரூ.1.5 லட்சம் இழந்ததாக சொல்லும் நபர்கள், ரூ.50 லட்சத்துக்கு வழக்கறிஞர்களை நியமித்து நீதிமன்றத்தில் வாதாட முடிகிறது என்றால், அதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என தெரிந்துகொள்ளலாம்.

அரசியல் களத்தில் மக்களை சந்தித்து வெற்றி பெற முடியாதவர்கள், தேர்தல் களத்தில் நான் நிற்கக்கூடாது என்பதற்காக இதுபோன்ற வழக்குகளை பதிந்து நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத்தர முயற்சிக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் கனவு நிறைவேறாது. என் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியால் பதியப்பட்டது. நிச்சயமாக நீதி வெல்லும். எப்போதும் அரசியல் களத்தில் என்னுடைய ரோல் மாடல் உழைப் பின் ஓய்வறியாத தமிழக முதல்வர்தான். இவ்வாறு அவர் பேசினார்.

## 'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம் இன்று தொடக்கம்: தமிழகம் முழுவதும் 1,256 முகாம்களில் மக்கள் பயன்பெற முதல்வர் அழைப்பு

சென்னை: ஆக.2-

தமிழகம் முழுவதும் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையிலான 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாமை சென்னையில் முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து முதல்வர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2021ம் ஆண்டு திமுக அரசு அமைந்த பிறகு, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற நோக்குடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, தமிழகத்தை அனைத்து துறையிலும் முன்னேறிய மாநிலமாக உயர்த்திக் காட்டியுள்ளோம்.

அந்த வகையில், சுகாதாரத் துறை சார்பில், மக்களைத் தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48 ஆகிய திட்டங்களை தொடர்ந்து, மருத்துவ சேவைகளை கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு திட்டத்தை உருவாக்கினோம்.

அதன் அடிப்படையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடியில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று சட்டப்பேரவையில் சுகாதாரத் துறை அமைச்சர் கடந்த ஏப்ரல் 21ம் தேதி அறிவித்தார். இதை செயல்படுத்தும் விதமாக, 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்களை, சென்னை செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் ஆகஸ்ட் 2ம் தேதி (இன்று) தொடங்கி வைக்க உள்ளேன்.




தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் நடைபெறும் இந்த முகாம்களில் அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 388 வட்டாரங்களில் தலா 3 என 1,164 முகாம்கள், மண்டலத்துக்கு ஒன்று என சென்னை மாநகராட்சியில் 15 முகாம்கள், 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் தலா 4 என 20 முகாம்கள், அதைவிட குறைந்த மக்கள்தொகை உள்ள 19 மாநகராட்சிகளில் தலா 3 என 57 முகாம்கள் என்று மொத்தம் 1,256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசை பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் இவை நடத்தப்பட உள்ளன. பல துறைகளை ஒருங்கிணைத்து பள்ளி, கல்லூரி வளாகங்களில் முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

சனிக்கிழமைதோறும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை முகாம்கள் நடைபெறும். 40 வயதுக்கு மேற்பட்டோர், நீரிழிவு, உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்பு உடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின் தங்கிய மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகாமில் அனைத்து பயனாளிகளுக்கும் கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் மருத்துவ சேவைகள் வழங்கப்படும். பொது மருத்துவ நிபுணர் அறிவுறுத்தலின்படி எக்ஸ்ரே, இசிஜி, யுஎஸ்ஜி, கருப்பை வாய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட உள்ளன. பயனாளிகளின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ரத்த அழுத்தம் உள்ளிட்ட பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக முகாமிலேயே உடனடியாக தெரிவிக்கப்படும்.

பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயம், எலும்பியல், நரம்பியல், தோல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு, இயன்முறை, பல், கண், மனநலம், நீரிழிவு, குழந்தைகள் நலன், நுரையீரல், கதிரியக்கவியல் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த சிறப்பு நிபுணர்களை கொண்டு ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளன.

முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின்கீழ் பதிவு, மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றும் முகாமில் வழங்கப்படும். அனைத்து மக்களும், குறிப்பாக 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் நடத்தப்படும் முதல்கட்ட பரிசோதனை அடிப்படையில் விரிவான பரிசோதனை பெறுவதற்காக மருத்துவ நிபுணர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் இந்த முகாமில் அவசியம் பங்கேற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.



## "கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை" மு.க.ஸ்டாலினை நலம் விசாரித்த பின் வைகோ பேட்டி

சென்னை: ஆக.2-

முதல்வர் மு.க.ஸ்டாலினை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இன்று சந்தித்துள்ளார். பின்னர் அவர், "2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரேமலதா விஜயகாந்த், ஓபிஎஸ் மற்றும் வைகோ என வரிசையாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலினை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மற்றும் அவரின் மகன் துரை வைகோ ஆகியோர் சந்தித்துள்ளனர். முதல்வர் ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்திருக்கும் நிலையில், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து நலம் விசாரிக்க அவரின் வீட்டிற்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, முதல்வரின் உடல்நலம் குறித்து வைகோ விசாரித்தார் என சொல்லப்படுகிறது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: மு.க.முத்து மறைவு குறித்து துக்கம் விசாரித்தேன். அதோடு, முதல்வர் ஸ்டாலினின் உடல்நலம் குறித்தும் விசாரித்தேன். அவர் மருத்துவமனையிலும் மக்கள் பணி தான் செய்து கொண்டிருந்தார்.

கவின் படுகொலையில் அரசு எடுத்த நடவடிக்கையை வரவேற்கிறேன். காவல்துறை என்ன தான் உடனுக்குடன் கைது நடவடிக்கை எடுத்தாலும், ஆணவக்கொலைகளை தடுக்க கடும் சட்டம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. இது குறித்து முதல்வரிடம் வலியுறுத்தினேன்.

2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை" இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ கரூர் மாவட்டம், இரும்பூதிப்பட்டியில் செயல்பட்டு வரும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. மீ. தங்கவேல், இ.ஆ.ப., அவர்கள் "நிறைந்தது மனம்" நிகழ்வின்போது நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

## பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய மத்திய அரசை வலியுறுத்துவோம்: கோவில்பட்டியில் இபிஎஸ் உறுதி

கோவில்பட்டி: ஆக.2-

தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய மத்திய அரசிடம் பேசி நடவடிக்கை எடுப்போம் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உறுதி அளித்தார்.




மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற பிரச்சார பயணத்துக்காக நேற்றிரவு அதிமுக பொதுச்செயலாளர் கோவில்பட்டிக்கு வந்தார். தொடர்ந்து நேற்று காலை அருள்தரும் செண்பகவல்லி அம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் தனியார் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினார்.

மாவட்டம் உருவாக்க வேண்டும்: அப்போது நேஷனல் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் எம்.பரமசிவம் பேசும்போது, மாவட்ட தலைநகருக்கான அனைத்து தகுகளையும் கொண்ட கோவில்பட்டியை தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்க வேண்டும். தீப்பெட்டி தொழிலுக்கு அச்சுறுத்தலாக உள்ள ஒரு முறை பயன்படுத்தக்கூடிய லைட்டர்களை தடை செய்ய வேண்டும் என தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகிறோம். தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்து 6 மாதங்களாகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் அதிமுக ஆட்சியின் போது நாங்கள் வைத்த கோரிக்கைகள் எதுவாயினும் ஒரே நாளில் நிறைவேற்றி கொடுக்கப்பட்டது. எனவே ஒரு முறை பயன்படுத்தக்கூடிய லைட்டர்களை இந்தியா முழுவதும் தடை செய்ய மத்திய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார் அவர்.


சத்துணவில் கடலைமிட்டாய்: கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் கே.கண்ணன் பேசுகையில், "கோவில்பட்டியின் அடையாளமாக உள்ள கடலை மிட்டாய்க்கு அதிமுக ஆட்சியில் தான் புவிசார் குறியீடு பெற்று தரப்பட்டது. ஆனால், பிற இடங்களில் உற்பத்தி செய்யப்படும் கடலை மிட்டாய்களுக்கும் கோவில்பட்டி கடலை மிட்டாய் என பெயரிடப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு அதிமுக ஆட்சி அமைந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிக புரதச்சத்து கொண்ட கடலைமிட்டாயை சத்துணவு திட்டத்தில் இணைத்து வாரம் இருமுறை பள்ளி குழந்தைகளுக்கு கடலை மிட்டாய் கொடுக்க அதிமுக ஆட்சி அமைந்தவுடன் முதல் கையெழுத்திட வேண்டும்", என்றார்.

தொடர்ந்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: சிறு குறு தொழில்களில்தான் அதிகமானோருக்கு வேலை கிடைக்கும் என்ற அடிப்படையில் அதிமுக ஆட்சியின்போது சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு அதிக சலுகைகளும். வசதிகளும் செய்து தரப்பட்டன. அதிமுக ஆட்சியின் போது தீப்பெட்டிக்கு விதிக்கப்பட்டிருந்த 18 சதவீத ஜிஎஸ்டி வரியை 12 சதவீதமாக குறைக்க மத்திய அரசிடம் பேசி நடவடிக்கை எடுத்தோம்.

இப்போது தீப்பெட்டி தொழிலுக்கு நெருக்கடியான சூழல் உருவாகியுள்ளது.. தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள லைட்டர்களை தடை செய்ய வேண்டும். இதற்காக அதிமுக சார்பில் சட்டமன்றத்தில் தனி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தோம். ஆனால் திமுக அரசு எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை. இதுகுறித்து தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று உள்ளதாக தெரிவித்தனர். நாங்களும் மத்திய அரசை தொடர்பு கொண்டு பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம்.

கடலை மிட்டாய்க்கு பெயர் பெற்ற ஊர் கோவில்பட்டி. விவசாயமும் விவசாயம் சார்ந்த தொழில்கள் செழித்தால் தான் உற்பத்தியாளர்கள் தயாரிக்கின்ற பொருளை மக்கள் விரும்பி வாங்குவார்கள். தாமிரபரணி வைப்பார் திட்டம் அதிமுக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு நில கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டன. இந்த ஆட்சி வந்ததும் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. அந்த் திட்டம் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் தொடங்கப்படும். அப்போது இப்பகுதி செழுமையாக இருக்கும். விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க அதிமுக ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தீப்பெட்டி மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தி தொழில் சிறக்க அதிமுக என்றும் துணை நிற்கும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியின் போது வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர் கடம்பூர் செ.ராஜூ வரவேற்றார். முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார் சி.விஜயபாஸ்கர்.தளவாய் சுந்தரம், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் காஞ்சி பன்னீர்செல்வம் மற்றும் தீப்பெட்டி, கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை ஐக்கிய கிறிஸ்தவ பேரவையை சேர்ந்தவர்கள், திருநெல்வேலி தெட்சிண மாற நாடார் சங்க நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் சந்தித்தனர். அதேபோல் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் தங்களது கோரிக்கை மனுக்களையும் வழங்கினர்.




## தாராபுரத்தில் புதிய மாநிலவரி அலுவலகம் திறப்பு:

# ரூ.2.53 கோடியில் கட்டப்பட்ட கட்டடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி வழியாக திறந்து வைத்தார்

தாராபுரம், ஆக.02-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய மாநிலவரி அலுவலக கட்டடத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த (ஜூலை 31) சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

இந்த புதிய அலுவலக கட்டிடம் 4520 சதுர அடியில் அமைந்துள்ளது. தரைத்தளத்தில் வணிகவரி அலுவலர்களுக்கான அறைகள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் உள்ளன. முதல் மாடியில் கூட்ட அரங்கு, பதிவு அறை உள்ளிட்ட வசதிகள் உள்ளன. திறப்பு விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், திருப்பூர் வணிகவரி இணை ஆணையர் கா.மா. கார்த்திகேயனி, நுண்ணறிவு இணை ஆணையர் ப.விமலா, கோட்டம் துணை ஆணையர்கள் மைதிலி, பொன்னுசாமி, சோபனா, நல்லரசி, நாகராஜி, தாராபுரம் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, மாநிலவரி அலுவலர் தியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழனியில் கீதா கண் மருத்துவமனை சார்பாக 60 வயது மேற்பட்டோருக்கு இலவச கண் பரிசோதனை முகாம்



திண்டுக்கல், ஆக.02-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கீதா கண் மருத்துவமனை 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இலவசமாக கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது இம் முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு பொது கண் மருத்துவ முகாம் கண்புரை அறுவை சிகிச்சை கண் கண்ணாடி விழிலன்ஸ் கருவிழியின் உபாதைகள் விழித்திரையில் லேசர் கண்ணீர் அழுத்தம் நோய் சிகிச்சை சர்க்கரை நோய் கண் பாதிப்பு கள் குழந்தைகள் கண்நலம் கண்ணில் அடிபடுதல் மூளை மற்றும் கண் மருத்துவம் தலைவலி சிகிச்சை போன்றவைகளுக்கு பரிசோதனை நடைபெற்றது. முகாமில் கலந்து கொண்ட பழனிய ஆயக்குடி பகுதி சேர்ந்த ஷேக் முகமதுக்கு அம் மருத்துவமனையில் பணியாற்றிய செவிலியர்கள் பிறந்தநாள் தெரிந்து கொண்டு கேக் வாங்கி அனைவரும் கொண்டாடினர் இம்மு முகாமில் கலந்து கொண்ட ராஜேஷ் கணேஷ் தலைமை மருத்துவர் மேலும் அறுவை சிகிச்சை மற்றும் மாற்று சிகிச்சைக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும் மற்றும் பள்ளி கல்லூரி வணிக நிறுவனங்கள் தொண்டு நிறுவனங்களும் மற்றும் மகளிர் சுய உதவி குழுவிற்கு இலவசமாக கண் பரிசோதனை முகாம் நடத்தப்படும் என கூறினார்

# சர்வதேச லயன்ஸ் கிளப், காட்பாடி லயன்ஸ் சங்கம் சார்பில் முப்பெரும் விழா மற்றும் 18ம் ஆண்டு பதவியேற்பு விழா



காட்பாடி, ஆக.02-

வேலூர் மாவட்டம், காட்பாடி, தாராபடவேடு, ஸ்ரீ நாராயணா திருமண மண்டபத்தில், சர்வதேச லயன்ஸ் கிளப், காட்பாடி லயன்ஸ் சங்கம் சார்பில் 18ம் ஆண்டு, புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு, புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்தல் மற்றும் சேவை திட்டங்கள், நலதிட்ட முப்பெரும் விழா, தலைவர் ஜே.பி.யுவராஜ் தலைமையுரையில், கே.ஜெயகுமார் புதிய நிர்வாகிகளை பதவியில் அமர்த்தி சிறப்புரை, சி.புவனே ஸ்வரி புதிய உறுப்பினர்களை இணைத்து கனியுரை , சேவை திட்டங்களை துவக்கி வைத்து மகிழ்வுரை கே.பொன்னம்பலம், புதிய தலைவராக கே.சோகாராமன், புதிய செயலாளராக ஆர்.இராதாகிருஷ்ணன், பொருளாளர் எஸ்.சுரேஷ் குமார் ஆகியோர் பதவியேற்று சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் பொதுநலன் கருதி மக்கள் சேவையில் ஈடுபட்டு பல்வேறு நலதிட்ட உதவிகளை செய்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து இடைவிடாது ஏழை எளிய மக்களுக்கு நலத திட்ட உதவிகளை செய்ய அனைத்து புதிய நிர்வாகிகளுக்கும் விளக்கவுரையாற்றி ஊக்குவித்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் புதிய நிர்வாகிகளை சீனிவாசன், வெங்கடபதி, மணிமேகலை, சண்முக சுந்தரம், புருஷோத்தமன், ரங்கராஜன், சிவராஜ், வெங்கடேஸ்வரன், காசி விஸ்வநாதன், சி.ராஜி, ஏ.கே.ரவி, சந்திரசேகரன், செல்வமணி, கே.ஆர். ரவி, சுந்தரமூர்த்தி, எம்.திலகர், இயக்குனர்கள் ஹரிநாதரெட்டி, பரமசிவம், பாஸ்கர் தொண்டைமான், ராஜேந்திரன், உறுப்பினர்கள் எல்.தேவராஜ் ஜெயின், ஜெயந்தி திலகர், சுரேஷ்பாபு, லதா செல்வமணி, உமா சோகாராமன், பாலாஜி புனிதவதி லட்சுமணன், புதிய உறுப்பினர்கள் விஜயகுமார், சுதாகர், மைதிலி, நளினிகுமாரி, ஈஸ்வரி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பழைய நிர்வாகிகளுக்கும், புதிய நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து, லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் உறுதிமொழியேற்று, முப்பெரும் விழாவை சிறப்பித்து பயனாளிகளுக்கு, நலதிட்டங்களை வழங்கி மரக்கன்றுகளும் வழங்கினர். இதில் பள்ளி மாணவிகளின் சிறப்பு பரதநாட்டிய கலை நிகழ்ச்சி இடம்பெற்று காண்போரை கவர்ந்தது. இறுதியில் செயலாளர் ஆர்.ராதாகிருஷ்ணன் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது. இந்த முப்பெரும் விழாவில், லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



## மாடம்பாக்கம் பகுதியில் அதிமுக சார்பில் தின்னை பிரச்சாரம் மற்றும் துண்டு பிரச்சரங்கள் விநியோகம்

செங்கல்பட்டு, ஆக.02-

செங்கல்பட்டு மாவட்டம் மாடம்பாக்கம் பகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க மாடம்பாக்கம் ஜோதி நகரில் மாடம்பாக்கம் பகுதி அதிமுக செயலாளர் எம்.தேவேந்திரன் தலைமையில் 70,வது வட்ட செயலாளர் குரு ஞானவேல் ஏற்பாட்டில் தின்னபிரச்சாரம் நடைபெற்றது. இதில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா ஆகியோர் கலந்து கொண்டு துண்டு பிரச்சுரங்கள் வழங்கினர். இதில் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் எம்.கே.கோவிந்தன், பகுதி இணை செயலாளர் தேனுகாதேவி, மாமன்ற உறுப்பினர் வாட்டர் ராஜ், பாலு, தயாளன் தர்மன், துளசிதாஸ், குணசேகர் ஆறுமுகம், நாகராஜ், செல்வம், இஸ்ரவேல் பாக்யராஜ், சுகந்தி, சர்மிளா ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




# காட்பாடி அக்சிலியம் கல்லூரியில் 66ம் பட்டமளிப்பு விழா

காட்பாடி, ஆக.02-

வேலூர் மாவட்டம், காட்பாடி காந்திநகர் பகுதியிலுள்ள அக்சிலியம் கல்லூரியில் 66ஆம் பட்டமளிப்பு விழா நடைப்பெற்றது. இவ்விழாவில் முனைவர் தி. தேவசேனா, இயக்குநர் மற்றும் பேராசிரியர், நானோ அறிவியல் தொழில்நுட்பம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை கலந்து கொண்டு 879 இளங்கலை மாணவிகள், 241 முதுகலை மாணவிகள், ஆகியோருக்குப் பட்டமளித்துச் பேசினார். இதில் அவர் கூறியதாவது: இளைய தலைமுறையினர் துடிதுடிப்புடன் செயல்பட்டு, நல்லறிவாய் வளர்ந்து சமூகத்திற்குச் சிறப்பாகத் தொண்டாற்ற வேண்டுமென்று மாணவியர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் பெருகிடும் வகையில் வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் முனைவர் அருட்சகோ, மேரி ஜோஸ்பின் ராணி கல்லூரிச் செயலர், நிகழ்விற்கு முன்னிலை வகித்தார். முனைவர் அருட்சகோ. அ. ஆரோக்கிய ஜெயசீலி கல்லூரி முதல்வர் வரவேற்புரை வழங்கினார். முனைவர் அருட்சகோ. அ.அமலா வளர்மதி துணை முதல்வர், முனைவர் அருட்சகோ. வின்சி, தேர்வாணையர் மற்றும் இயற்பியல் துறைத் தலைவர் அவர்களும், அனைத்துத் துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியப் பெருமக்களும் இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். முனைவர் அ. கலைச்செல்வி, உதவிப்பேராசிரியர் ஆங்கிலத்துறை சார்பில் நன்றியுரையாற்றி நாட்டுப்பண்ணுடன் பட்டமளிப்பு விழா நிறைபெற்றது.

# தமிழ்நாடு முதலமைச்சரின் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை துவக்கி வைப்பதைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் முகாம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா செய்தியாளர்களுடன் கலந்துரையாடல்

கன்னியாகுமரி, ஆக.02-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெறவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் குறித்து பத்திரிகை மற்றும் ஊடக செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் நாளை (02.08.2025) சென்னையில் தொடங்கி வைக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து நாகர் கோவில் கார்மல் பள்ளியில் நடைபெறும் முகாமை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் தமிழ்நாடு முழுவதும் 1164 முகாம்கள் நடத்தப்படுகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளில் மூன்று முகாம்கள் என 27 முகாம்கள் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூன்று முகாம்கள் என மொத்தம் 30 முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்கள் சனிக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். இந்த முகாமில் அனைத்து வகையான உடல் பரிசோதனைகளும், பொது மருத்துவம், பொது அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதயநல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், இயற்கை மருத்துவம், உணவியல் ஆலோசனை உள்ளிட்ட 17 சிறப்பு மருத்துவ சிகிட்சை அளிக்கப்படுகிறது.



சிறந்த மருத்துவர்களை வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் முகாமில் வருபவர்களுக்கு இரத்த பரிசோதனை உள்பட அனைத்து வகையான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக புற்றுநோய் பாதிப்பு உள்ளதா என்பதை குறித்து சோதனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு பிரத்தியேகமாக புற்றுநோய் பரிசோதனை, நீரழிவு நோய் பரிசோதனை, பாத பரிசோதனை மேற்கொள்ளப்படும். அனைத்து பெண்களும் இந்த மூன்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். பரிசோதனை மேற்கொள்பவர்களுக்கு உடனடியாக பரிசோதனை அறிக்கை வழங்கப்படுவதோடு, மேற்சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நபர்களுக்கு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு, மேற் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

மேலும் முகாமில் ஆண்கள், பெண்கள், கர்ப்பிணிகள் என மூன்றாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தற்பொழுது உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. நடைபெற்ற முகாம்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, அட்டை பெற்ற நபர்களுக்கு, இம்முகாமில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நடைபெற்றுவரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற 7 முகாம்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 நபர்களுக்கு சிகிச்சை அளிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 300 பேருக்கும் நாளை நடைபெறும் முகாமில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்படும். இது மட்டும் இன்றி நாகர்கோவில் மாநகராட்சி தெற்கு மண்டலம் 33,34,35,36,37,43,44,45,46,49,50,51,52 ஆகிய வார்டுகள் மற்றும் மேற்கு மண்டலம் 1, 2,3,4,17,18,19,20,21,30,31,32 ஆகிய வார்டுகளை சேர்ந்த பொதுமக்கள் இந்த முகாமை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாளை நடைபெறவுள்ள முகாமில் குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இதய நோயாளிகள், படுக்கையுற்ற நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், தூய்மை பணியாளர்கள், தொழிலாளர்களை பரிசோதனை செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் மட்டுமின்றி மாநகராட்சி, பேரூராட்சி ஊராட்சிக்கு பகுதிக்கு உட்பட்ட தூய்மை பணியாளர்கள் இந்த நலன் காக்கும் ஸ்டாலின் முகாமை பயன்படுத்தி உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நாளை நடைபெறும் முகாம் தொடர்பாக நாகர்கோவில் நகரப் பகுதியில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முகாமில் தொற்று நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு மேல் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். மேலும் முதலமைச்சர் மருத்துவ காப்பீடு திட்ட அட்டை இல்லாதவர்களுக்கு, புதிதாக முதலமைச்சர் காப்பீடு திட்ட அட்டை வழங்கப்படும். அதுபோல் மாற்றுத்திறனாளிகளுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் காசநோய் உள்ளவர்களுக்கும், அறிகுறிகள் உள்ளவர் களுக்கும் தேவையான எக்ஸ்ரே, சளி பரிசோதனை உள்ளிட்ட அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். புதிதாக முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டை பெற தேவைப்படும் அனைத்து ஆவணங்களும் முகாமில் பெற்றுக்கொள்ள பொதுசுகாதாரத்துறை, சமூகநலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வருவாய்துறை உள்ளிட்ட துறைகளின் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள் ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்.

நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆசாரிப்பள்ளம் அரசு கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.சுரேஷ் பாலன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.சகாய ஸ்டீபன் ராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஜாண் ஜெகத் பிரைட், பத்திரிகை மற்றும் ஊடக செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபக் கட்டிடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவகக் கட்டடம்

## தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

மதுரை, ஆக.02- மதுரை மாவட்டம், ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபக் கட்டிடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவகக் கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்.

ஒட்டல் தமிழ்நாடு மதுரை அலகு 2ற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் கூடுதல் வருவாய் ஈட்டும் நோக்கோடும் நவீன வசதிகளுடன் கூடிய நிகழ்விடங்கள். உணவறைகள், சமையலறை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டிடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்குச் சொந்தமான தமிழ்நாடு ஓட்டல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ப பல்வேறு வசதிகளை மேம்பாடு செய்து புதுப்பொலிவுடன் சிறப்புற மட்டுமின்றி திருமணம், வர்த்தக கருத்தரங்கு, சமூக நிகழ்ச்சிகள் அரசு விழாக்கள் நடைபெறும் வகையில் சிறந்த வர்த்தக நட்சத்திர விடுதியாக செயல்பட்டு வருகிறது.

மதுரையில் அழகர் கோவில் சாலையிலும், பெரியார் பஸ் நிலையம் அருகேயும் 'ஓட்டல் தமிழ்நாடு' என்ற பெயரில் ஓட்டல்கள் செயல்படுகின்றன. குறைவான வாடகையில் காலை இலவச உணவு வசதியுடன் கூடிய குளிர்சாதன வசதி உள்ள அறைகளும், குளிர்சாதன வசதி அல்லாத அறைகள், விசாலமான கார் நிறுத்தம், கருத்தரங்குக் கூடங்கள் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய மதுபானக்கூடம், குழந்தைகள் விளையாட்டு சாதனங்களுடன் கூடிய விளையாட்டு மைதானம் மற்றும் அதிநவீன மின் உலர் சலவையகம் ஆகிய வசதிகள் உள்ளன. மதுரை அழகர்கோயில் சாலையில் உள்ள ஓட்டலில் குளிர்சாதன வசதி உள்ள அறைகளும், குளிர்சாதன வசதி அல்லாத அறைகளும், "இயல்" "இசை", என்னும் கூடங்களும், மேலும் 400 <tel:400> நபர்கள் அமரக்கூடிய "நாடகம்" என்னும் திருமண அரங்கு மற்றும் "முத்தமிழ்" என்னும் குளிர்சாதன வசதியுடன் கூட்ட அரங்கமும் பிரமாண்டமான முறையில் சிறப்புற அமையப் ''நாட்டியம்" என்னும் திறந்தவெளி அரங்கு பல்வேறு கலை நிகழ்ச்சிகள் சமூக நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்கு பொருட்காட்சி ஆகியவற்றிற்கு குறைந்த வாடகைக்கு அளிக்கப்படுகிறது. மேலும் "அமுதகம்" எனப்படும் குளிரூட்டப்பட்ட பல்சுவை உணவகம் தங்கும் விருந்தினர் மற்றும் பிற விருந்தினர்களுக்காக காலை 06.00 <tel:06.00> மணி முதல் இரவு 09.30 <tel:09.30> மணிவரை செயல்படுகிறது. இவ் உணவகத்தில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் விரும்பி உண்ணக் கூடிய தென்னிந்திய, வடஇந்திய மற்றும் சைனீஸ், தந்தூரி உணவு வகைகள் சரியான விலையில் செயற்கை நிறமூட்டிகளோ, சுவையூட்டிகளோ சேர்க்கப்படாமல் தரமானதாக தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது நவீன வசதிகளுடன் கூடிய நிகழ்விடங்கள், உணவறைகள், சமையலறை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டமைப்புடன் மேம்படுத்தப்பட்டுள்ள ஓட்டல் தமிழ்நாடு மதுரை மாநகர மக்களுக்கு மிகப்பெரிய பயனுள்ளதாக அமையும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் (மதுரை வடக்கு) திரு.கோ. தளபதி அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.நாகராஜன் அவர்கள். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள், மாவட்ட சுற்றுல அலுவலர் திரு.சோ. ஸ்ரீபாலமுருகன் அவர்கள், மண்டல மேலாளர் (தெற்கு) திரு.மு.கணேஸ்வரன் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் விருந்து மண்டபக் கட்டடம், நவீன சமையலறை கட்டடம் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவக கட்டடம் ஆகிய முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்.

# நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட சிவகாமி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை - கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனிஷ் சாப்ரா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.02- தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி சிவகாமி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனிஷ் சாப்ரா நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொதுமக்களின் வசதிக்குகேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

அதனடிப்படையில் இன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 11 பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்களுக்கு வடசேரி சிவகாமி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. இதுவரை வாங்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. பொதுமக்கள் அளிக்கக்கூடிய மனுக்கள் மீது ஒவ்வொரு துறையும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்ப அலுவலர் திரு.ஹனிஷ் சாப்ரா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.ஹனிஷ் சாப்ரா, பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, நாகர்கோவில் மாநகராட்சி நகர்நல அலுவலர் திரு.ஆல்பன் மதியரசு, நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.கந்தசாமி, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



■ திருச்சி மாநகராட்சி மாமன்ற கூட்டம் நேற்று மேயர் அன்பழகன் தலைமையில் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில் அரியமங்கலத்தில் உள்ள மாநகராட்சி குப்பை கிடங்கில் பாதாள சாக்கடை கழிவு நீரை சேகரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ராட்சத கிணறுகளுக்கும், நாய்களுக்கான கருத்தடை மையத்திற்கும் இடையே மீன்களுக்கான உணவு உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மாமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் திவ்யா உள்ளிட்ட 33 கவுன்சிலர்கள் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்

## அமர்நாத் யாத்திரையில் 4 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்தனர்

ஸ்ரீநகர், ஆக.02- தெற்கு காஷ்மீர் இமயமலையில், கடல் மட்டத்தில் இருந்து 3,888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் குகைக் கோயில் உள்ளது. இங்கு இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசனம் செய்ய ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித யாத்திரை செல்கின்றனர். இந்த ஆண்டுக்கான அமர்நாத் புனித யாத்திரை கடந்த ஜூலை 3ம் தேதி தொடங்கியது ஆகஸ்ட் 9ம் தேதி வரை யாத்திரை நடைபெற உள்ளது. இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா நேற்று வெளியிட்ட 'எக்ஸ்' பதிவில், "பாபா அமர்நாத் சாத்தியமற்றதை சாத்தியமாக்குகிறார். அவரது ஆசீர்வாதத்தால், குகைக் கோயிலில் தரிசனம் செய்த பக்தர்கள் எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்துள்ளது. இந்த அற்புதத்திற்காக நான் சிவபெருமானை வணங்குகிறேன். மேலும் புனித யாத்திரையை பக்தர்களுக்கு ஒரு தெய்வீக அனுபவமாக மாற்றுவதில் பங்கு வகிக்கும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்" என்று கூறியுள்ளார்.



# 2025 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடத்துவது குறித்த, மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, ஆக.02- சிவகங்கை மாவட்டம், 2025 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடத்துவது குறித்த, மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்திடும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளானது ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் (Chief Minister's Trophy Games-2025) மாவட்ட, மண்டலம் மற்றும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் வருகின்ற 22.08.2025 முதல் தொடங்கி நடைபெறவுள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் கடந்த 17.7.2025 அன்று, 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கான இணையதள முன்பதிவும் தொடங்கி வைக்கப்பட்டு, வருகின்ற 16.8.2025 அன்று வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளானது, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண், பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், 25 வகையான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளும், 7 வகையான மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகளும், 37 வகையான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை சிறந்த முறையில், நடத்துவது குறித்து, ஒருங்கிணைப்பு குழு கூட்டம் சிறப்பாக நடை பெற்று வருகிறது. இப்போட்டிகளில், மாவட்ட அளவிலான முன்பதிவினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை, அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

தங்களது துறை ரீதியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலர்கள் ஒருங்கிணைந்து, தங்களுக்கான பணியினை சிறப்பாக மேற்கொண்டு, ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை இவ்வாண்டும் சிறந்த முறையில் நடத்துவதற்கு ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பிரான்சிஸ் அவர்கள், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ரமேஷ்கண்ணன் மற்றும் அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில், பால் பதப்படுத்தும் இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். உடன் பொது மேலாளர் திரு.ராஜசேகர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கப்பட உள்ளதை முன்னிட்டு

# முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, ஆக்.02- தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட சக்கம்பட்டி இந்து மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கப்பட உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.மகாராஜன் அவர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உங்கள் குடும்பத்தின் நலன் அரசின் பொறுப்பு என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக 1256 நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

இம்முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை (02.08.2025) காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைக்க உள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஒரு முகாம் வீதம் ஒவ்வொரு வட்டாரத்திலும் சுழற்சிமுறையில் நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் இரத்தப் பரிசோதனை மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை செய்யப்படும். மேலும், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், இந்திய மருத்துவம் (ஆயுர்வேதம், சித்தா, யுனானி, யோகா, ஹோமியோபதி) ஆகிய 17 வகையான துறை சிறப்பு மருத்துவர்கள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், இம்முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

தேனி மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு மருத்துவ முகாம் வட்டாரத்திற்கு மூன்று வீதமாக மொத்தம் 24 மருத்துவ முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாம்களில் மருத்துவ பரிசோதனை தேவைப்படுவோர் கலந்து கொண்டு பயனடையலாம்.

தேனி மாவட்டத்தில் நாளை ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட சக்கம்பட்டி இந்து மேல்நிலைப்பள்ளியில் நாளை முகாம் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.அன்புசெழியன் (பொ), மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அனிதா (பொ) உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



# சோழிங்கநல்லூர் 183 வது வட்டம் பாலவாக்கத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

சோழிங்கநல்லூர், ஆக.02-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் குமரன் ரெசிடென்சி ஜூலை (31) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 183 வது மாமன்ற உறுப்பினர், தமிழரசி சோமு அனைவரையும் வரவேற்றார். நிகழ்வில் 14 வது மண்ட குழு தலைவர், பெருங்குடி, எஸ் .வி .ரவிச்சந்திரன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர், பாலவாக்கம் சோமு உள்ளிட்ட மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது குடும்ப அட்டைக்கு நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்ட ஜாதி சான்றிதழ் கிராம நிர்வாக அலுவலர், சி. பிரபுவை பாராட்டி பொது மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம்




பம்மல், ஆக.02-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் பம்மல் எல்.சி.மஹால் திருமண மண்டபத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் அவர்கள் தலைமையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதி நிதிகள் பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே. ரவிச்சந்தின், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில். குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர்தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர்தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் L.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், பிஎஸ்.ரவி, வட்டக் கழக செயலாளர்கள் ஏ. அனிஸ்டன், மு.இன்பசேகர், என்.காந்தி, முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்

இக்கூட்டத்தில் ஆகஸ்ட் 9ம் தேதி மாண்புமிகு முதல்வர் தாம்பரம் மாநகரம் வருகை ஆகஸ்ட் 5ம் தேதி உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஓராணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை

கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA-2, BLC, BDA, கழக முன்னோடிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இக்கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்கையில் மிகவும் சிறப்பாக பணியாற்றிய BLA BLC BDA ஆகியவர் களுக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

இறுதியில் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் அனைத்து நிர்வாகிகளுக்கும் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது



■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் 2025 26 தலைவராக ஸ்ரீ கோமதி அம்பிகை பஸ் அதிபர் வை.சு..வைரவன் செயலராக வழக்கறிஞர் நாகராஜன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். ரோட்டரி 3212 மாவட்ட ஆளுநர் ஜே. தினேஷ் குமார் முன்னாள் ஆளுநர் கே ஆர் துணை ஆளுநர் விஸ்வா சுல்தான் ஆகியோர் உடனிருந்தனர்




# காவல்துறை எஸ்.எஸ்.ஐ. தெய்வசிகாமணியின் பணி நிறைவு பாராட்டு விழா

வேலூர், ஆக.02-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, ஜாப்ரா பேட்டை, துர்கா மஹாலில் பணி நிறைவு பாராட்டு விழா, பணமடங்கி காவல் நிலையம் சிறப்பு உதவி ஆய்வாளர் ஏ.தெய்வசிகாமணி ஆகிய இவர் காவல் துறையில் பணியில் சேர்ந்து 38 ஆண்டுகள் ஆன நிலையில், தற்போது கே.வி.குப்பம் தாலுகா பணமடங்கி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி, வெற்றிகரமாக பணி நிறைவு பெற்று பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக காட்பாடி டி.எஸ்.பி. பழனி, லத்தேரி காவல் ஆய்வாளர் முரளிதரன், கே.வி.குப்பம் காவல் ஆய்வாளர் தமிழ்ச் செல்வன், முன்னாள் டி.எஸ்.பி வெங்கடேசன் மற்றும் வழக்கறிஞர் கோகுல கண்ணன், செஞ்சி விவசாயியும் தொழில் அதிபருமான வெங்கடேசன் மற்றும் எஸ் எஸ்.ஐ குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டு பணி நிறைவு பெறும் எஸ்.எஸ் .ஐ.க்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து பாராட்டி வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.



# காட்பாடி, கிளித்தான்பட்டறையில் 23ஆம் ஆண்டு ஸ்ரீ சுந்தரி அம்மன் ஆலயத்தில் ஆடிவெள்ளி கூழ்வார்க்கும் திருவிழா

வேலூர், ஆக.02-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி, கிளித்தான்பட்டறையில் 23ஆம் ஆண்டு ஸ்ரீ சுந்தரி அம்மன் ஆலயத்தில் ஆடி வெள்ளி, கூழ்வார்க்கும் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக காட்பாடி வடக்கு பகுதி, 5வது வட்ட திமுக செயலாளரும், விநாயகம் ரியல் எஸ்டேட் மற்றும் விநாயகா பில்டர்ஸ் நிறுவனருமான பி.விநாயகம் கலந்து கொண்டு கூழ்வார்க்கம் திருவிழாவை ஆலய நிர்வாகிகள் பக்தர்களுடன் கோவிந்தா.. கோவிந்தா... என்ற கோஷம் எழுப்பி கூழ் வார்த்தல் சிறப்பு பூஜையை தொடங்கி வைத்து, அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து கோயில் நிர்வாகம் சார்பில் கௌரவிக்கப்பட்டது. ஆடி மாதங்களில் அம்மன் கோயில்களில் மிக சிறப்பு அலங்காரத்துடன், சிறப்பு பூஜைகளுடன் திருவிழாக்கள் அம்மன் வழிபாடு நடைபெறுவது வழக்கம், இதில் கிளித்தான் பட்டறையில் 3ம் ஆடி வெள்ளிக்கிழமை இந்த ஸ்ரீ சுந்தரிஅம்மனுக்கு கூழ்வார்த்தல் மற்றும் மாலையில் பொங்கலிட்டு, பம்பை உடுக்கை, மேளதாளலங்கள் முழங்க சிறப்பு பூஜைகள் மற்றும் பல்வேறு பாரம்பரிய நடன கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்ற நிலையில், வெள்ளிக்கிழமை மாலையில் பட்டுக்கிளி விநாயகம் குடும்பத்தினர்கள், பி.விநாயகம் வி.விஜயலட்சுமி, வி. ஹர்ஷவர்த்தினி குடும்பத்தினர் சார்பில் ஷீ.டிவி சரிகமபா டிவி புகழ் பாடகர்கள் இன்னிசை கச்சேரி நடைபெற்றது. மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளுடன் மூன்று நாள் திருவிழாவாக கொண்டாடப்பட்டது.



# தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2 வது மண்டலம் 20 வது வார்டு பகுதியில் புதிய நியாயவிலை கடையை திறந்து வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி

பல்லாவரம், ஆக.02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலம் 20 வது வார்டு அயோத்திதாசர் பண்டிதர் சாலையில் புதிய நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மண்டல குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை கலந்து கொண்டு குத்து விளக்கேற்றியும் அம்பேத்கர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து விடுதலை சிறுத்தை கட்சியின் மாமன்ற உறுப்பினர் செ.முத்துகுமார் முன்னிலையில் நியாய விலை கடையை திறந்து வைத்து இனிப்புகள் மற்றும் பொதுமக்களுக்கு அத்தியாவாசிய பொருட்களை வழங்கியும் வாழ்த்து தெரிவித்தார். இதில் தெற்கு பகுதி செயலாளர் பெர்னார்ட் மற்றும் திமுக நிர்வாகிகள், நியாய விலை கடை அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரில் ஒருவருக்கு சமூக நீதி பள்ளி மாணவர் விடுதியில் சமையலர் பணிக்கான ஆணையை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிஷ் நாரணவரே நேற்று வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் புஷ்பா தேவி ஆகியோர் உடனிருந்தனர்..



# காட்பாடி தாலுகா சேவூரில் ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட காவல் படை 15ம் பட்டாலியன் தளவாய் நிர்வாக அலுவலகம் திறப்பு விழா

வேலூர், ஆக.02-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, சேவூரில், சேவூரில் காவல் படை 15ம் பட்டாலியன் தளவாய் நிர்வாக அலுவலகம் திறப்பு விழா, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக, சேவூரில் ரூ.4.77 கோடி மதிப்பிட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 15ம் பட்டாலியன் தளவாய் நிர்வாக அலுவலகத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன். காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் 1 வது மண்டலக்குழுத் தலைவர்புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், தமிழ்நாடு சிறப்பு காவல்படை 15 வது அணி தளவாய் செல்வமணி, துணை தளவாய் பிரகாஷ், சேவூர் ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளையில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக் கு பாதத்தியப்பட்ட ஸ்ரீ ஆகாச முத்து காளியம்மன் கோவில் 33 ஆம் ஆண்டு லட்சார்ச்சனை விழாவை முன்னிட்டு விழாவின் தொடக்கமாக நேற்று காலை காப்பு கட்டும் நிகழ்வு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு காப்பு கட்டி கொண்டனர். திருவிழா காலங்களில் கோவில் வளாகத்தில் கழிவறை குடிநீர், உடை மாற்றும் அறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூடுதலாக செய்து தர கோரி அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161